**சுருக்கம்**

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திருமதி அ.அமுதா, இளநிலை உதவியாளர், க/பெ. (அமரர்) திரு.அ அருணாசலம், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகம், நாமக்கல் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை**

அரசாணை (2ப) எண்.40

நாள் 23.02.2021.
திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, மாசி – 11

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.000013/ப.தொ.4/இரு.3/2019, நாள் 06.05.2020.

-----

**ஆணை:**

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் நாமக்கல் சுகாதாரப் பகுதி மாவட்டம், கொக்கராயன்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதார ஆய்வாளர் நிலை–1– ஆகப் பணியாற்றி வரும்போது 19.02.2006 அன்று பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் திரு.அ.அருணாசலம் என்பவரின் மனைவி திருமதி அ.அமுதா என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 04.03.2019 அன்று முற்பகல் நாமக்கல் சுகாதார மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்தில் பணியில் இணைந்தார் என்று தெரிவித்து, தனியரின் தற்காலிகப் பணியினை, அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 04.03.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. அரசு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை, 01.03.1994 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கடித எண்.2941/க்யூ1/1994–1 மற்றும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை ஆகியவற்றில் அறிவுறுத்தியுள்ளவாறு, சான்றிதழ்கள் / ஆவணங்கள் ஆகியவற்றுடன் ஆய்வு செய்தபோது, திருமதி அ.அமுதா என்பவர் கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

3. மேலும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் வரும் பதவிகளில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தேர்வாணையத்தின் இசைவு பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள நிலையில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி அ.அமுதா என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 04.03.2019 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன்னாளிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண் 2263/க்யூ1/2021–1, நாள் 10.02.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண் 4483/ஜி2/2021–1, நாள் 19.02.2021 ஆகியவற்றின் ஒப்புதலோடு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை– 600 006.
தனியர், (இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை–600 006 வழியாக.)
மாநிலக் கணக்காயர், சென்னை– 600 018.
மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

<u>நகல்</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

R-NO:2011/A5/2019 Dt: 04-2021 o/o

பிரிவு அலுவலர்

Deputy Director of Health Services
Namakkal

24/2/21

Forwarded

Deputy Director of Health Services
Namakkal

28/04/2021

To.
Tmt. A. Amutha. Junior Assistant
GPHC. Mallasamudram
[Through the Block Medical Officer]